

# நான் ஒரு "Smart" Phone!

எனக்கு பெருமை தாங்க வில்லை! பின்னே இருக்காதா? நான் என்ன சாதாரணமான "கேவலம்" ஒருவரோடு ஒருவர் பேசுவதற்கு "மட்டும்" உபயோகபடுத்தும் கருவியா நான்? நான் ஒரு "smart phone"! என்னுடைய புத்தம் புதிய, அதி நவீன Android Operating System என்ன, மின்மினுக்கும் user interface என்ன, touch screen என்ன, 3G internet connectivity என்ன, உலகில் இருக்கும் எல்லா பாடல்களையும் store செய்து கொள்ள கூடிய கிகா பைட்ஸ் மெமரி மற்றும் MP3 Player, கணக்கில்லாத மெகா பிக்ஸல் கேமரா என்ன, கேம்ஸ் என்ன, ... சொல்லிக்கொண்டே போகலாம். Of course, தன் குடும்பதினரோடும், உற்றார் உறவினரோடும், நண்பர்களோடும் பேசுவதற்கு "கூட" என்னை உபயோகப்படுதிகிறார். ஆனால் பேச்சுக்காக மட்டும் டெலிபோன் என்ற காலம் எல்லாம் மலை ஏறி போச்சு! என்னுடைய owner என்னை எல்லோரிடமும் என்னுடைய பல சிறப்பம்சங்களை (பேச்சை தவிர!) காட்டி தம்பட்டம் அடித்து கொண்டு இருந்தார் – எனக்கு ஒரே குஷிதான்!

ஒரு நாள் காலை எழுந்தவுடன் எனக்கு ஒரே அதிர்ச்சி! என்னுடைய கேமரா, MP3 Player, 3G, Android, User Interface எதுவுமே இல்லை! "வெறும்" பேச்சுக்கு மட்டுமே என்னை உபயோக படுத்தி கொண்டு இருந்தார்கள்! அதை தவிர என்னை மதிப்புடனோ ஆச்ச்சர்யதுடனோ யாரும் பார்க்க வில்லை; சொல்ல போனால் என்னை என் owner ஓ அல்லது மற்றவர்களோ, ஏறு எடுத்து கூட பார்க்கவில்லை! உச்சி வானத்தில் இருந்து கீழே விழுந்தது போல, கனவில் இருந்து விழித்து கொண்டது போல எனக்கு என்னை பற்றிய shocking சுய உணர்வு திரும்பியது – நான் இந்த ஸ்மார்ட் போன் இல்லை. இந்த காமேரவோ, user interface ஓ , android operating systemஓ, MP3 Playerஓ "நான்" இல்லை – இவை எல்லாம் என்னுடைய ஸ்வபாவதிற்கும், இலக்கிற்கும் சம்பந்தம் இல்லாதவை; வெளி புரமானவை (extraneous to my nature). இவை எல்லாம் இல்லாது இருந்தாலும் "நான்" தொடர்ந்து "இருந்து கொண்டு" தான் இருக்கிறேன்!

அப்படி என்றால் "நான்" உண்மையில் யார்? என்னுடைய உண்மையான purpose என்ன? உள்ளங்கை நெல்லி கனி போல எனக்கு எல்லாம் நிதர்சனமாக தெரிய தொடங்கியது. ***என் purpose நமக்கு வேண்டியவர்களிடத்தில் பேசி தொடர்பு கொள்ள சாத்தியமாக்குவதே.*** மற்றவை அல்ல! "நான்" "smart" போன் இல்லை; "நான்" அதற்குள் இருக்கும் sim card மட்டுமே. அதி நவீனமான Android phoneல் இருந்தாலும் சரி, சாதாரண instrument ல் இருந்தாலும் சரி, என்னுடைய நம்பர், அடையாளம் மாறாது. எல்லா phoneம் உள்ள sim card ஒரே மாதிரிதான் இருக்கிறது. இதை



உணர்ந்த உடன், "நான்" கனவுலகில் இருந்து நினைவு உலகத்திற்கு வந்தேன்!

மனிதர்களாகிய நம்முடைய நிலைமையும் கிட்ட தட்ட இந்த மாதிரி தான். நாம் நம்மை நாம் இருக்கும் உடலுடன் – phone instrument – உடன் identify செய்து கொள்கிறோம். "நான் சிவப்பு நிறம்", "நான் அழகன்", "நான் பணக்காரன்", "நான் உலகம் போற்றும் புகழ் உடையவன்" என்று நமக்கு வெளியே இருக்கும் குனாதிசயங்களுடனே நம்மை associate / identify செய்து கொள்கிறோம். இதெல்லாம் நம்முடைய உண்மையான ஸ்வபாவம் அல்ல! இவை எல்லாம் இன்று இருக்கும், நாளை இருக்காது! இவை பற்றி எண்ணம் நம்மை பேய் பிடித்தால் போல் ஆக்கிரமித்து கொண்டு, இவைதான் "நான்" என்ற தப்பான பாதையில் கொண்டு செல்கிறது. உண்மையான "நான்" ஆன sim card ஐ நாம் நினைக்கவும் மறந்து விடுகிறோம். Sim card or signal இல்லை என்றால் மற்ற feature க்கு ஏதாவது பயன் உள்ளதா?

மற்றும், இந்த வெளி குணாதிசயங்கள் எல்லாம் நம்முடைய உண்மையான குறிக்கோளும் (purpose) அல்ல. Sim card ஆகிய நம்முடைய ***ஆத்மா*** வின் முக்கிய குறிக்கோள் நமக்கு ***உண்மையான உறவினரான*** இறைவனுடன் பேசுவதற்கு மாத்திரமே! இப்படி பேச நமக்கு தேவை படும் ஒரு கருவியே இந்த உடல் அல்லது phone instrument. இந்த உண்மையான குறிக்கோளையும், ஸ்வபாவதையும் மறந்து, "நம்மை" கானல் நீர் போன்ற இந்த உடலுடன் identify செய்து கொள்கிறோம். நமக்கு உண்மையில் வேண்ட பட்டவரான பரமாத்மாவுடன் பேசாமல் வெறுமனே வெட்டியாக இந்த உடலை மற்ற தேவை அற்ற வேலைகளில் ஈடு படுத்திகிறோம்.

உண்மையான "நான்" அந்த sim card மட்டுமே! எந்த உடலில் – instrument ல் இருந்தாலும், என்னுடைய ஆத்மா வின் ஸ்வபாவமும், identityம் மாறாது. ஒரு instrumentல் இருந்து இன்னொன்றுக்கு மாறினாலும், இந்த sim cardன் கணக்கும் மாறாது. நமது ஆத்மா ஒரு உடலில் இருந்து இன்னொரு உடலுக்கு போனாலும், அதன் "கணக்கான" பாவ புண்ணியங்கள் தொடர்ந்தே வரும். இன்று அழகான மனித உருவில் இருக்கலாம், நாளை ஒரு புழுவின் உருவில் இருக்கலாம் – இருந்தாலும் இந்த ஆத்மாவின் பாவ புண்ணியங்கள் தொடர்ந்தே வரும்! நீங்கள் உங்களுடைய instrumentஐ மாற்றி விட்டீர்கள் என்பதற்காக உங்கள் service provider (Airtel/Aircel/AT &T etc) கூப்பிட்டு, "என்னுடைய பழைய பாக்கியை எல்லாம் cancel செய்து விடுங்கள்" என்று கேட்டால் ஒப்பு கொள்வார்களா? அதே போல நமது ஆத்மா ஒரு உடலை விட்டு இன்னொரு உடலில் சென்றாலும், நமது "bill" ஆன பாவ புன்னியங்களும் நம்மை தொடர்ந்தே வரும்.



நம் கண்ணுக்கு தெரியும் இந்த உடல் – instrument – ஸ்தூல ஸ்வரூபம். நம்முடைய ***உண்மையான*** ஸ்வரூபம் நம்முள் இருக்கும் ஆத்மாவான sim card மட்டுமே! நம்முடைய இந்த உடலின் உற்றார், உறவினர், நிறம், பணம், புகழ் எல்லாமே ஒரே நொடியில் தொலைந்து போகலாம். ஆனால் நம்முடைய ஆத்மா மட்டும் மாறவே மாறாது. இதுவே நமது மதத்தில் இருக்கும் கர்ம மற்றும் புனர் ஜன்மம் முதலிய தத்துவத்தின் (concepts இன்) அடிப்படை.

இந்த தத்துவத்தை இந்த உதாரணத்தை உபயோகித்து மேலும் ஆராய்ந்தோம் என்றால், இன்னும் நன்றாக புரியும். ஒரு sim card கேவலம் silicon எனப்படும் மண்ணிலிருந்து உருவாகும் பொருளில் இருந்து செய்ய படுகிறது. மண் என்பது "ப்ருத்வி" என்றும் கொள்ளலாம். இந்த "ப்ருத்வி"ஏ எல்லா சிருஷ்டிக்கும் மூலாதாரமாக விளங்குகிறது.

அந்த sim card அல்லது ப்ருத்வி மட்டும் தனியாக இருந்தால் ஒன்றும் செய்ய முடியாது. அது உயிர் பெற்று எழ ஒரு உடல் தேவைபடுகிறது. இறைவன் நமது ஆத்மாவான sim card க்கு நம்முடைய (அதாவது நம்முடைய ஆத்மவினுடைய) பாவ புண்ணியங்களின் – ***கர்மாக்களின்*** -- தகுதிக்கு ஏற்ப, நமக்கு கிடைக்க கூடிய ஓர் பிறவியை, உடலை, வழங்குகிறான். ஒரு கறிகாய் வியாபாரி ஒரு no frills போன் வைத்துகொள்வார்; ஒரு மேல் பதவியில் உள்ள பணக்காரர் மிக latest model smart phone வைத்து கொண்டு இருப்பார்; அதே போல் மிகவும் "கொடுத்து வைத்தவர்கள்" அழகாகவும், பணக்காரர்கள் ஆகவும், புகழ் உள்ளவர்களாகவும் பிறக்கிறார்கள்; சற்று குறைந்த புண்ணியங்கள் உள்ளவர்கள் ஏழையாகவும், பலவீனர்களாகவும் மற்ற குறைகளுடன் பிறக்கிறார்கள். இறைவன் நமது கர்மாக்களுக்கு தகுந்த படி நமக்கு உடலை கொடுத்தவுடன், அதை activate செய்கிறான். நீங்கள் ஒரு sim card வாங்கி உங்கள் போனில் போருதினாலும் கூட, உடனே அது செயல் பட ஆரம்பிக்க வில்லை. Aircel / Airtel etc (service provider) அதை activate செய்ய வேண்டும். இறைவன் செய்யும் activation தான் "***முக்கிய பிராணன்***" என்பது. இதையே நமது புராணங்கள் வாயு பகவானாக உருவகப்படுதுகிறது. நமது ஆத்மா முக்கிய பிராணன் மூலமாக செயல் படுத்த படா விட்டால், நம் உடல் உயிரற்ற சடலம் ஆகி விடுகிறது.

sim cardம், ஸ்தூல சரீரமும், முக்கிய பிராணம் என்கிற சக்தியும் சேர்ந்தால்தான் ஒரு sim cardன் பேசும் தன்மையை நாம் உணர முடிகிறது. முதல் இரண்டும் தாமாகவே (independent) இருந்தாலும் கூட, முழு பயனும், உயிர் தன்மையும் அடைய வேண்டும் என்றால் இறைவன் அளிக்கும் முக்கிய பிராணன் மிக அவசியம். எந்த உடலில் இருந்ததாலும் ஆத்மா மாறாது – எந்த instrumentல் இருந்தாலும் sim card தன்மை மாறாது. இந்த உண்மையை நாம் உணர்ந்தோம் ஆனால், இந்த வாழ்கையின் கானல் நீர்



போன்ற சுகங்களை துறந்து, நமது ஆத்மாவின் குறிக்கோளை உணர்ந்து, இறைவனுடன் சங்கமம் ஆகும் நிலையை அடைய முதல் படிகளை எடுத்து கொண்டு விட்டோம்!

Just to summarize:

- ஆத்மா ("நான்") என்பது உள்ளே இருக்கும் sim card தான். அது மறைந்து இருக்கும் உடல் (போன்) அல்ல
- ஒரு instrumentல் இருந்து மற்றொரு instrumentக்கு sim card மாறினாலும், அதன் நம்பர் மற்றும் balance மாறுவதில்லை. நம் ஆத்மா எத்தனை பிறவிகள் எடுத்தாலும் நம் balance ஆன கர்மாக்கள் நம்மை தொடர்ந்து கொண்டே வரும்.
- ஒரு போன் இன் முக்கிய வேலை நம்முடைய உற்றார் உறவினரோடு பேச்சு வார்த்தை கொள்ளவே – நம் ஆத்மாவின் முக்கிய குறிக்கோள், நமக்கு எப்போதும் வேண்டப்படவரான இறைவனுடன் தொடர்பு கொள்ளவே.
- ஒரு போன் பயன் பட வேண்டும் என்றால், sim card, instrument and activation வேண்டும். ஒரு ஆத்மா செயல் பட வேண்டும் என்றால், அதற்கு ஒரு ஸ்தூல சரீரம், முக்கிய பிராணன் வேண்டும். இந்த fusion ஐ செய்விப்பவன் பரமாத்மன் ஒருவனே! "அவனின்றி ஓர் அணுவும அசையாது!"

